# KEMENTERIAN PELAJARAN MALAYSIA

# மலேசியக் கல்வி அமைச்சு

# தமிழ்ப்பள்ளிக்கான தர அடைவு ஆவணம்

# தமிழ்மொழி

## ஆண்டு 1

# DOKUMEN STANDARD PRESTASI

# BAHASA TAMIL SJKT

## TAHUN 1

# தேசியக் கல்வித் தத்துவம்

மலேசியக் கல்வியானது இறைநம்பிக்கை, இறைவழி நிற்றல் எனும் அடிப்படையில் அறிவாற்றல், ஆன்மீகம், உள்ளம், உடல் ஆகியவை ஒன்றிணைந்து சமன்நிலை இயைபும் பெற தனி மனிதரின் ஆற்றலை முழுமையாக மேம்படுத்தும் ஒரு தொடர் முயற்சியாகும். இம்முயற்சியானது அறிவு, சால்பு, நன்னெறி, பொறுப்புணர்ச்சி, நல்வாழ்வு பெறும் ஆற்றல் ஆகியவற்றைப் பெற்றுக் குடும்பத்திற்கும் சமுதாயத்திற்கும் நாட்டிற்கும் ஒருமைப்பாட்டையும் செழிப்பையும் நல்கும் மலேசியரை உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டதாகும்.

## பொருள் விளக்கம்

**கட்டு** என்பது தனிநபர் பற்றிய அடைவு நிலையை அறிக்கைவழி வெளியிடுவதற்குப் படிநிலைகளால் வகுக்கப்பட்ட ஒரு குறிப்பி.

**தரம்** என்பது தனிநபர் பற்றிய ஒரு குறிப்பிட்ட செயலெல்லையின் அடைவு நிலையை பொதுப்படையாகவும் முழுமையாகவும் விளக்கும் கூற்றாகும்.

**தர அடைவு** என்பது மாணவர்களின் கற்றல் அடைவுநிலையைத் தரக்கூற்று அடிப்படையில் மதிப்பிடும் மற்றும் மாணவர்களின் கற்றல் வளர்ச்சி நிலையைக் காட்டுவதாகும். தரத்தில் படர்ச்சி இரண்டு நிலையில் வடிவமைக்கப்பட்டுள்ளது; ஒன்று படுக்கைநிலைப் படர்ச்சி (கட்டுமம்) மற்றொன்று நிமிர்வுநிலைப் படர்ச்சி (கட்டு). இது, மாணவரின் கற்றல் வளர்ச்சியை ஒன்று அல்லது ஒன்றுக்கும் மேற்பட்ட சரியான சொல் அல்லது சொற்றொடர் அடங்கிய தகுதிப்பேற்றின்வழி காட்டவல்லது.

**தரவிவரிப்பு** என்பது தரக்கூற்று அடிப்படையில் மாணவர்கள் என்ன அறிந்திருக்கின்றனர், எதனை ஆளத் தெரிந்திருக்கின்றனர் என்பதனை மதிப்பிடக்கூடிய கூற்றாகும்.

**தரச்சான்று**

**மாணவர்கள்** : தர விவரிப்பை அடிப்படையாகக் கொண்டு எவ்வாறு மாணவர்கள் தாங்கள் அறிந்திருப்பதையும் ஆளத் தெரிந்திருப்பதையும் செயல்படுத்துகின்றனர் என்பதனை விளக்குகின்ற கூற்று.

**கருவி** : நிழற்படங்கள், வரைப்படங்கள், வரலாற்றுக் குறிப்புகள், அறிக்கைகள் போன்ற செயற்பாங்கு அல்லது உற்பத்திப் பொருள் வடிவிலான இடுபணிகளைச் செயல்படுத்தி அவற்றை ஆதாரமாகக் காட்டப்பெறுகின்ற பொருள்.

**கருவி** என்பது எழுத்துச் சோதனை, வாய்மொழிச் சோதனை, செய்துகாட்டல், செய்முறைச் சோதனை போன்ற செயலெல்லையில் மாணவரின் அடைவுநிலையையும் ஆளுமையையும் மதிப்பிடுவதாகும்.

# தர அடைவுச் சட்டகம்

| கட்டு | தரம் |
|---|---|
| 1 | அறிதல் |
| 2 | அறிதலும் புரிதலும் |
| 3 | அறிதலும்  புரிதலும் ஆளலும் |
| 4 | அறிதலும் புரிதலும் பண்புடனும் சரியாகவும் ஆளலும் |
| 5 | அறிதலும் புரிதலும் பண்புடனும் சிறப்புடனும் ஆளலும் |
| 6 | அறிதலும் புரிதலும் பண்புடனும் சிறப்புடனும் ஆளலும்  முன்மாதிரியாதலும் |

கட்டு விளக்கம்

| கட்டு | தரக்கூற்று | விளக்கம் |
|---|---|---|
| 1 | அறிதல் | மாணவர்கள், அடிப்படைக் கூறுகளை அறிந்திருப்பர் அல்லது அடிப்படைத் திறன்களை நிறைவேற்றும் அல்லது அடிப்படைக் கூறுகளுக்கு ஏற்பத் துலங்கும் ஆற்றல் பெற்றிருப்பர். |
| 2 | அறிதலும் புரிதலும் | மாணவர்கள், தொடர்புமுறையை மாற்றியமைப்பதிலும் அல்லது பொருள்பெயர்ப்புச் செய்வதிலும் கற்றவற்றைத் தெளிவு படுத்துவதிலும் புரிந்திருக்கும் ஆற்றல் பெற்றிருப்பர். |
| 3 | அறிதலும் புரிதலும் ஆளலும் | மாணவர்கள், அறிவாற்றல் துணைக்கொண்டு சூழலுக்கேற்ப குறிப்பிட்ட திறன்களை நிறைவேற்றும் ஆற்றல் பெற்றிருப்பர். |
| 4 | அறிதலும் புரிதலும் பண்புடனும் சரியாகவும் ஆளலும் | மாணவர்கள், சரியான முறையிலும் பண்பாகவும் குறிப்பிட்ட திறனை நிறைவேற்றும் ஆற்றல் பெற்றிருப்பர். |
| 5 | அறிதலும் புரிதலும் பண்புடனும் சிறப்புடனும் ஆளல் | மாணவர்கள், புதிய சூழலில் சரியான முறையிலும் நிலையாகவும் நேர்நிலையாகவும் அல்லது சீரான முறையிலும் குறிப்பிட்ட திறன்களை நிறைவேற்றும் ஆற்றல் பெற்றிருப்பர். |
| 6 | அறிதலும் புரிதலும் பண்புடனும் சிறப்புடனும் ஆளலும் முன்மாதிரியாதலும் | மாணவர்கள், ஆக்கச் சிந்தனை மற்றும் புத்தாக்கச் சிந்தனையை வெளிப்படுத்தவும், கோரிக்கையை நிறைவேற்ற முடிவெடுக்கும் ஆற்றல் பெற்றிருப்பதோடு, அன்றாட வாழ்வில் எதிர்நோக்கும் சவால்களை எதிர்கொள்ளவும் தகவல்களைப் பரிமாறவும் கலந்துரையாடவும் நிலையான பண்புடன் முன்மாதிரியான மொழியையும் பயன்படுத்தும் ஆற்றல் பெற்றிருப்பர். |

## குறியிலக்கு

இக்கலைத்திட்டம் மாணவர்கள் கல்வியறிவு பெறுவதற்கும் அன்றாட வாழ்வின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்கும் சமூகத் தொடர்பை ஏற்படுத்திக் கொள்வதற்கும் தேவைப்படும் தமிழ்மொழி ஆற்றலைப் பெறுவதைக் குறியிலக்காகக் கொண்டுள்ளது. மேலும், பலவகைப் பனுவல்களை வாசித்து உய்த்துணரவும் எண்ணங்களையும் உணர்வுகளையும் வெளிப்படுத்தவும் இது வழிவகுக்கும்.

## நோக்கம்

தமிழ்மொழி கற்றல் கற்பித்தல் வழி, தொடக்கப்பள்ளி இறுதியில் மாணவர்கள் அடைய வேண்டியவை:

1. சமூக உறவு கொள்வதற்கும் அதனை மேம்படுத்துவதற்கும் சரியான மொழியைப் பயன்படுத்திப் பேசுதல்.
2. பிறர் கூறும் கருத்துகளைக் கவனமுடன் செவிமடுத்துப் புரிந்து கொண்டு துலங்குதல்; நல்ல மொழியில் கருத்துகளை வெளிப்படுத்துதல்.
3. பல்வேறு மூலத்திலிருந்து திரட்டிய கருத்தையும் தகவலையும் சீர்தூக்கித் தெரிவுசெய்து வாய்மொழியாகவும் எழுத்து வடிவத்திலும் படைத்தல்.
4. வாய்மொழியாகக் கருத்துப் பரிமாற்றம் செய்து அதனை எழுத்து வடிவத்தில் படைத்தல்.
5. தன் கருத்தையும் ஏடலையும் வாய்மொழியாகவும் எழுத்து வடிவத்திலும் ஆக்ககரமாக விளைபயனுள்ள வகையில் படைத்தல்.
6. அறிவு வளர்ச்சி பெறவும் மனமகிழ்ச்சி அடையவும் வாசிக்கும் பழக்கத்தைப் பெறுதல்.
7. பல்வேறு எழுத்துப் படிவங்களை வாசித்துப் புரிந்து கொண்டு உய்த்துணர்தல்.
8. எல்லாச் சூழல்களிலும் நன்னெறிப்பண்பு, இணக்கப்போக்கு, நாட்டுப்பற்று ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தொடர்பு கொள்ளுதல்.
9. இலக்கண அறிவைப் பெற்று முறையாகப் பயன்படுத்துதல்.
10. செய்யுள் மொழியணியின் பொருளை அறிந்து உய்த்துணரவும் பயன்படுத்தவும் தெரிந்து கொள்ளுதல்.

| கட்டு | தரக்கூற்று |
|---|---|
| 1 | கேட்டல்-பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய திறன்களின் அடிப்படைக் கூறுகளை அறிந்திருத்தல். |
| 2 | செவிமடுத்த, வாசித்த, சொற்களை, சொற்றொடர்களை, வாக்கியங்களை அறிந்திருத்தல்; புரிந்திருத்தல்; அவற்றைப் பேச்சு வடிவிலும் எழுத்து வடிவிலும் வெளிப்படுத்துதல். |
| 3 | செவிமடுத்த, வாசித்த, தகவல்களை அறிந்திருத்தல்; புரிந்திருத்தல்; அவற்றைப் பேச்சு வடிவிலும் எழுத்து வடிவிலும் பயன்படுத்துதல். |
| 4 | பல்வேறு சூழலில் செவிமடுத்த, வாசித்த தகவல்களை அறிந்திருத்தல்; புரிந்திருத்தல்; அவற்றைப் பேச்சு வடிவிலும் எழுத்து வடிவிலும் சரியான முறையில் பயன்படுத்துதல். |
| 5 | பல்வேறு சூழலில் செவிமடுத்த, வாசித்த பல்வகைத் தகவல்களைப் புரிந்திருத்தல்; பகுத்தறிதல்; அவற்றைப் பேச்சு வடிவிலும் எழுத்து வடிவிலும் சரியான முறையில் துல்லியமாகப் படைத்தல். |
| 6 | பல்வேறு சூழலில் செவிமடுத்த, வாசித்த பல்வகைத் தகவல்களைப் புரிந்திருத்தல்; அவற்றைப் பேச்சு வடிவிலும் எழுத்து வடிவிலும் சரியான முறையில் துல்லியமாக விளைபயன்மிக்க வகையில் படைத்தல்; மதிப்பிடுதல். |

| கட்டு | தரக் கூற்று | தர விவரிப்பு | தரச் சான்று |
|---|---|---|---|
| **1**<br>**அறிதல்** | **B1**<br>கேட்டல்-பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய திறன்களின் அடிப்படைக் கூறுகளை அறிந்திருத்தல். | **B1 DL1**<br>செவிமடுத்த ஒலிகளை அறிதல்.<br><br>**B1 DB1**<br>ஒற்றுமை வேற்றுமைகளை அடையாளம் காணுதல்.<br><br>**B1 DT1**<br>கண் நகர் பயிற்சி செய்தல்.<br><br>**B1 DT2**<br>கை இயக்கப் பயிற்சி செய்தல்.<br><br>**B1 DT3**<br>கண்களையும் கைகளையும் ஒருங்கிணைக்கும் பயிற்சி செய்தல். | **B1 DL1 E1**<br>செவிமடுத்த ஒலிகளை அடையாளங்காட்ட இயலும்.<br><br>**B1 DB1 E1**<br>பொருள்களை வடிவம், அளவு, நிறம் ஆகியவற்றிற்கேற்ப அடையாளம் காண இயலும்; வகைப்படுத்த இயலும்.<br><br>**B1 DT1 E1**<br>இடம் தொடங்கி வலம் வரை எழுத்துகளைப் பார்த்துக் கண்களை அசைக்க இயலும்.<br><br>**B1 DT2 E1**<br>இடம் தொடங்கி வலப் பக்கமாக வரைய இயலும்.<br>▪ கோலங்கள்<br>▪ வடிவங்கள்<br><br>**B1 DT3 E1**<br>இடம் தொடங்கி வலம் வரை எழுத்துகளைப் பார்த்து எழுத இயலும். |

| | | | |
|---|---|---|---|
| | | **B1 DT4**<br>கொம்பு, வளைவு, சுழி, விலங்கு உள்ளடக்கிய தமிழ் எழுத்துகளுக்கேற்ற கோலங்கள் வரைதல். | **B1 DT4 E1**<br>இடம் தொடங்கி வலஞ் சுழித்து எழுத இயலும்.<br>▪ சுழி<br>▪ கொம்பு<br>▪ விலங்கு<br>▪ வளைவு |

| கட்டு | தரக் கூற்று | தர விவரிப்பு | தரச் சான்று |
|---|---|---|---|
| **2**<br><br>**அறிதலும் புரிதலும்** | **B2**<br>செவிமடுத்த, வாசித்த, சொற்களை, சொற்றொடர்களை, வாக்கியங்களை அறிந்திருத்தல்; புரிந்திருத்தல்; அவற்றைப் பேச்சு வடிவிலும் எழுத்து வடிவிலும் வெளிப்படுத்துதல். | **B2 DL1**<br>செவிமடுத்த எழுத்தின் ஒலியை மீண்டும் ஒலித்தல். | **B2 DL1 E1**<br>செவிமடுத்த எழுத்தின் ஒலியை அளபுக்கு ஏற்ப ஒலித்துக்காட்ட இயலும்.<br>▪ மெய்யெழுத்து - ½ மாத்திரை<br>▪ குறில் - 1 மாத்திரை<br>▪ நெடில் - 2 மாத்திரை<br>▪ ஆய்தம் - ¼ மாத்திரை |
| | | **B2 DB1**<br>தமிழ் எழுத்துகள் அடங்கிய சொற்களைச் சரியான உச்சரிப்புடன் வாசித்தல். | **B2 DB1 E1**<br>சரியான ஒலிப்பு முறையுடன் வாசிக்க இயலும்.<br>▪ எழுத்துகள்<br>▪ சொற்கள்<br><br>**B2 DB1 E2**<br>எழுத்திலக்கணத்தைச் சரியாகப் பயன்படுத்த இயலும். |
| | | **B2 DT1**<br>நல்ல கையெழுத்தில் சரியான வரிவடிவத்துடன் தூய்மையாக எழுதுதல். | **B2 DT1 E1**<br>எழுத்துகளைச் சரியான அளவு, இடைவெளி, வரிவடிவம் ஆகியவற்றுடன் தூய்மையாக எழுத இயலும். |

| | | | |
|---|---|---|---|
| | | | **B2 DT1 E2**<br>கொம்பு, வளைவு, சுழி, விலங்கு ஆகியவற்றைக் கொண்ட எழுத்துகளைச் சரியான அளவுடன் நல்ல கையெழுத்தில் தூய்மையாக எழுத இயலும்.<br><br>**B2 DT1 E3**<br>எழுத்துகளைப் பார்த்து, சரியான வரிவடிவத்துடன் நல்ல கையெழுத்தில் தூய்மையாக எழுத இயலும்.<br><br>**B2 DT2 E1**<br>செய்யுள் மொழியணி ஆகியவற்றைப் பார்த்துச் சரியான வரிவடிவத்துடன் நல்ல கையெழுத்தில் தூய்மையாகவும் அழகாகவும் எழுத இயலும். |
| | | **B2 DT2**<br>செய்யுள், மொழியணியைப் பார்த்து எழுதுதல். | |

| கட்டு | தரக் கூற்று | தர விவரிப்பு | தரச் சான்று |
|---|---|---|---|
| 3<br><br>**அறிதலும் புரிதலும் ஆளலும்** | **B3**<br>செவிமடுத்த, வாசித்த, தகவல்களை அறிந்திருத்தல்; புரிந்திருத்தல்; அவற்றைப் பேச்சு வடிவிலும் எழுத்து வடிவிலும் பயன்படுத்துதல். | **B3 DL1**<br>செவிமடுத்த சொற்களைச் சரியாக உச்சரித்தல்.<br><br>**B3 DL2**<br>செவிமடுத்த செய்யுள், மொழியணிகளை உச்சரித்தல். | **B3 DL1 E1**<br>செவிமடுத்த சொற்களைச் சரியாக உச்சரிக்க இயலும்.<br>▪ உயிரெழுத்தைக் கொண்ட சொற்கள்<br>▪ இனவெழுத்தைக் கொண்ட சொற்கள்<br>▪ சந்தச் சொற்கள்<br>▪ இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்கள்<br>▪ குறில், நெடில் ஓசை கொண்ட சொற்கள்<br>▪ ஓரெழுத்து, ஈரெழுத்து, மூவெழுத்துச் சொற்கள்<br>▪ பேச்சு வழக்குச் சொற்கள்<br>▪ கிரந்த எழுத்துகளைக் கொண்ட சொற்கள்<br><br>**B3 DL2 E1**<br>செய்யுளும் மொழியணியும் சரியாக உச்சரிக்க இயலும். |

| | | | |
|---|---|---|---|
| | | **B3 DB1**<br>சொற்றொடர்களைச் சரியான உச்சரிப்புடன் வாசித்தல். | **B3 DB1 E1**<br>சொல், சொற்றொடர்களைச் சரியான உச்சரிப்புடன் சுயமாக வாசிக்க இயலும்.<br>▪ குற்றெழுத்தில் தொடங்கும் சொற்கள்.<br>▪ நெட்டெழுத்தில் தொடங்கும் சொற்கள்.<br>▪ மெய்யெழுத்தில் முடியும் சொற்கள். |
| | | **B3 DB2**<br>செய்யுளையும் மொழியணியையும் வாசித்தல். | **B3 DB2 E1**<br>செய்யுள், மொழியணி ஆகியவற்றைச் சரியான உச்சரிப்புடன் சுயமாக வாசிக்க இயலும். |
| | | **B3 DT1**<br>சொற்களை உருவாக்கி எழுதுதல்.<br>▪ ஓரெழுத்துச் சொற்கள்<br>▪ ஈரெழுத்துச் சொற்கள்<br>▪ மூவெழுத்துச் சொற்கள்<br>▪ குற்றெழுத்துச் சொற்கள்<br>▪ நெட்டெழுத்துச் சொற்கள்<br>▪ லகர, ளகர, ழகரச் சொற்கள்<br>▪ கிரந்த எழுத்துச் சொற்கள். | **B3 DT1 E1**<br>பொருள் தரும் சொற்களைப் பிழையற எழுத இயலும்.<br><br>**B3 DT1 E2**<br>தெரிந்த சொற்களை எழுத இயலும்.<br><br>**B3 DT1 E3**<br>புதிய சொற்களை உருவாக்கி எழுத இயலும்.<br><br>**B3 DT1 E4**<br>எழுத்திலக்கணத்தைச் சரியாகப் பயன்படுத்த இயலும். |

| கட்டு | தரக் கூற்று | தர விவரிப்பு | தரச் சான்று |
|---|---|---|---|
| **4**<br><br>**அறிதலும் புரிதலும் பண்புடனும் சரியாகவும் ஆளலும்** | **B4**<br>பல்வேறு சூழலில் செவிமடுத்த, வாசித்த தகவல்களை அறிந்திருத்தல்; புரிந்திருத்தல்; அவற்றைப் பேச்சு வடிவிலும் எழுத்து வடிவிலும் சரியான முறையில் பயன்படுத்துதல். | **B4 DL1**<br>செவிமடுத்தவற்றை மீண்டும் கூறுதல்.<br><br>**B4 DL2**<br>செவிமடுத்த ஒன்றைப்பற்றி உரையாடுதல்.<br><br>**B4 DL3**<br>தூண்டலுக்கேற்ப துலங்குதல்.<br><br>**B4 DL4**<br>செய்யுளையும் மொழியணிகளையும் செவிமடுத்து மீண்டும் கூறுதல்.<br><br>**B4 DB1**<br>சொற்களை வாசித்தல். | **B4 DL1 E1**<br>செவிமடுத்த கதை, பாடல், கவிதை, செய்யுள் போன்றவற்றை மீண்டும் தெளிவாகக் கூற இயலும்.<br><br>**B4 DL2 E1**<br>செவிமடுத்த ஒன்றைப்பற்றிச் சரியான உச்சரிப்புடன் உரையாட இயலும்.<br><br>**B4 DL3 E1**<br>தூண்டலுக்கேற்ப பல்வகைச் சூழலில் துலங்க இயலும்.<br><br>**B4 DL4 E1**<br>செய்யுளையும் மொழியணியையும் சரியான பொருளறிந்து கூற இயலும்.<br><br>**B4 DB1 E1**<br>சொற்களை வாசித்துப் புரிந்துகொண்டு, சரியான பொருள் கூற இயலும். |

| | | | |
|---|---|---|---|
| | | **B4 DB2**<br>சொற்றொடர்களை வாசித்தல். | **B4 DB2 E1**<br>சொற்றொடர்களை வாசித்துப் புரிந்துகொண்டு, சரியான பொருள் கூற இயலும். |
| | | **B4 DB3**<br>இருசொற்களைக் கொண்ட வாக்கியங்களை வாசித்தல். | **B4 DB3 E1**<br>இருசொற்கள் கொண்ட வாக்கியங்களை வாசித்துப் புரிந்துகொண்டு, சரியான பொருள் கூற இயலும். |
| | | **B4 DB4**<br>மூன்று சொற்களைக் கொண்ட வாக்கியங்களை வாசித்தல். | **B4 DB4 E1**<br>மூன்று சொற்களைக் கொண்ட வாக்கியங்களை வாசித்துப் புரிந்துகொண்டு, சரியான பொருள் கூற இயலும். |
| | | **B4 DB5**<br>செய்யுள், மொழியணிகளை வாசித்தல். | **B4 DB5 E1**<br>செய்யுளையும் மொழியணிகளையும் வாசித்துப் பொருளறிந்து பல்வகைச் சூழலில், சரியாகப் பயன்படுத்த இயலும். |
| | | **B4 DT1**<br>மூன்றுக்கு மேற்பட்ட எழுத்துகளைக் கொண்ட சொற்களை உருவாக்கி எழுதுதல். | **B4 DT1 E1**<br>சந்தச் சொற்களை உருவாக்கி எழுத இயலும்.<br><br>**B4 DT1 E2**<br>இரட்டிப்பு எழுத்துகளைக் கொண்ட சொற்களை உருவாக்கி எழுத இயலும். |

| | | | |
|---|---|---|---|
| | | **B4 DT2**<br>சொற்றொடர்களை உருவாக்கி எழுதுதல். | **B4 DT1 E3**<br>இனவெழுத்துச் சொற்களை உருவாக்கி எழுத இயலும்.<br><br>**B4 DT2 E1**<br>சொல்லிலக்கணத்தைச் சரியாகப் பயன்படுத்தி சொற்றொடர்களை உருவாக்கி எழுத இயலும். |

| கட்டு | தரக் கூற்று | தர விவரிப்பு | தரச் சான்று |
|---|---|---|---|
| **5**<br><br>**அறிதலும் புரிதலும் பண்புடனும் சிறப்புடனும் ஆளலும்** | **B5**<br>பல்வேறு சூழலில் செவிமடுத்த, வாசித்த பல்வகைத் தகவல்களைப் புரிந்திருத்தல்; பகுத்தறிதல்; அவற்றைப் பேச்சு வடிவிலும் எழுத்து வடிவிலும் சரியான முறையில் துல்லியமாகப் படைத்தல். | **B5 DL1**<br>சரியான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைக் கொண்டு கேள்விகளுக்குப் பதில் கூறுதல். | **B5 DL1 E1**<br>பல்வகைச் சூழலில் யார், எது, என்ன எனும் கேள்விகளுக்குச் சரியான சொல்லைப் பயன்படுத்தி பதில் கூற இயலும்.<br><br>**B5 DL1 E2**<br>பல்வகைச் சூழலில் யார், எது, என்ன எனும் கேள்விகளுக்குச் சரியான சொற்றொடரைப் பயன்படுத்தி பதில் கூற இயலும்.<br><br>**B5 DL1 E3**<br>பல்வகைச் சூழலில் யார், எது, என்ன எனும் கேள்விகளுக்கு எளிய வாக்கியங்களைப் பயன்படுத்தி பதில் கூற இயலும்.<br><br>**B5 DL1 E4**<br>பல்வகைச் சூழலில் செய்யுள், மொழியணி இனிய சொற்றொடர், போன்றவற்றின் பொருளை அறிந்திருப்பதோடு பேச்சில் சரியாகப் பயன்படுத்த இயலும். |

| | | | |
|---|---|---|---|
| | | **B5 DB1**<br>எளிய வாக்கியங்களை வாசித்தல்.<br><br>**B5 DB2**<br>எளிமையான கவிதையை வாசித்தல்.<br><br>**B5 DB3**<br>செய்யுளையும் மொழியணியையும் வாசித்தல்.<br><br>**B5 DT1**<br>சொற்களை நினைவுகூர்ந்து எழுதுதல்.<br><br>**B5 DT2**<br>சொற்றொடர்களை நினைவுகூர்ந்து எழுதுதல். | **B5 DB1 E1**<br>எளிய வாக்கியத்தைச் சரியான தொனி, உச்சரிப்புடன் வாசிக்க இயலும்.<br><br>**B5 DB2 E1**<br>எளிமையான கவிதையை ஏற்ற தொனி, சரியான உச்சரிப்பு ஆகியவற்றுடன் வாசிக்க இயலும்.<br><br>**B5 DB3 E1**<br>செய்யுளையும் மொழியணியையும் சரியான தொனி, உச்சரிப்புடன் வாசிக்க இயலும்.<br><br>**B5 DT1 E1**<br>சொற்களை நினைவுகூர்ந்து பிழையற எழுத இயலும்.<br><br>**B5 DT2 E1**<br>சொற்றொடர்களை நினைவுகூர்ந்து பிழையற எழுத இயலும்.<br><br>**B5 DT2 E2**<br>எழுவாய், பயனிலை கொண்ட வாக்கியங்களைச் சரியாக எழுத இயலும்.<br><br>**B5 DT2 E3**<br>சொல்வதைப் பிழையற எழுத இயலும். |

| | | | |
|---|---|---|---|
| | | **B5 DT3**<br>செய்யுள் மொழியணிகளையும் பொருளையும் நினைவுகூர்ந்து எழுதுதல். | **B5 DT3 E1**<br>செய்யுள் மொழியணிகளை நினைவுகூர்ந்து எழுத இயலும்.<br><br>**B5 DT3 E2**<br>செய்யுள், மொழியணிகளின் பொருளை நினைவுகூர்ந்து எழுத இயலும். |

| கட்டு | தரக் கூற்று | தர விவரிப்பு | தரச் சான்று |
|---|---|---|---|
| **6**<br><br>**அறிதலும் புரிதலும் பண்புடனும் சிறப்புடனும் ஆளலும் முன்மாதிரியாதலும்** | **B6**<br>பல்வேறு சூழலில் செவிமடுத்த, வாசித்த பல்வகைத் தகவல்களைப் புரிந்திருத்தல்; அவற்றைப் பேச்சு வடிவிலும் எழுத்து வடிவிலும் சரியான முறையில் துல்லியமாக விளைபயன்மிக்க வகையில் படைத்தல்; மதிப்பிடுதல். | **B6 DL1**<br>பொருத்தமான சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பயன்படுத்திப் பேசுதல். | **B6 DL1 E1**<br>பொருத்தமான மரியாதைச் சொல், சொற்றொடர் ஆகியவற்றைப் பல்வகைச் சூழலில் பயன்படுத்திப் பேச இயலும்.<br><br>**B6 DL1 E2**<br>பொருத்தமான மரியாதைச் சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றைப் பல்வகைச் சூழலில் பயன்படுத்திப் பேச இயலும். |
| | | **B6 DL2**<br>செய்யுள் மொழியணி, இனிய சொற்றொடர், போன்றவற்றைச் சூழலுக்கு ஏற்ப பயன்படுத்திப் பேசுதல். | **B6 DL2 E1**<br>செய்யுள், மொழியணி இனிய சொற்றொடர், போன்றவற்றின் பொருளறிந்து பல்வகைச் சூழலுக்கு ஏற்ப விளைபயன்மிக்க வகையில் பயன்படுத்த இயலும். |
| | | **B6 DB1**<br>எளிய வாக்கியங்கள், சிறு பத்திகள் வாசித்தல். | **B6 DB1 E1**<br>எளிய வாக்கியங்களையும் சிறு பத்திகளையும் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசிக்க இயலும். |

| | | | |
|---|---|---|---|
| | | **B6 DB2**<br>எளிய கவிதைகள், சிறிய கதைகள் வாசித்தல். | **B6 DB2 E1**<br>எளிய கவிதைகளையும் சிறிய கதைகளையும் சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசிக்க இயலும். |
| | | **B6 DB3**<br>செய்யுள், மொழியணிகள், இனிய சொற்றொடர், போன்றவற்றை வாசித்தல். | **B6 DB3 E1**<br>செய்யுளையும் மொழியணிகளையும் இனிய சொற்றொடரையும், சரியான வேகம், தொனி, உச்சரிப்புடன் வாசிக்க இயலும். |
| | | **B6 DT1**<br>எளிய வாக்கியங்களை எழுதுதல். | **B6 DT1 E1**<br>எளிய வாக்கியங்களை வாக்கிய இயைபுக்கேற்ப எழுத இயலும்:<br>▪ செய்தி வாக்கியம்<br>▪ கட்டளை வாக்கியம்<br>▪ வேண்டுகோள் வாக்கியம்<br>▪ வினா வாக்கியம் |
| | | **B6 DT2**<br>சிறுபத்தியை எழுதுதல். | **B6 DT2 E1**<br>20 சொற்களுக்குக் குறையாமல், வாக்கிய இயைபுக்கேற்ற சரியான வாக்கியங்கள் அமைந்த பத்தியை எழுத இயலும். |
| | | **B6 DT3**<br>செய்யுள், மொழியணி, இனிய சொற்றொடர் போன்றவற்றைப் பயன்படுத்தி எழுதுதல். | **B6 DT3 E1**<br>பல்வகைச் சூழலில், செய்யுள், மொழியணி, இனிய சொற்றொடர், போன்றவற்றைப் விளைபயன்மிக்க வகையில் பயன்படுத்தி எழுத இயலும். |